
# 2. அடைமழை நாளில்



## கொட்டும் மழை...


அந்த மழைநாள் இரவை
எங்களால் மறக்கவே முடியவில்லை
கோடை மழையல்ல அது கொட்டும் மழை!

நானும் குட்டித் தம்பியும்
கடைசித் தங்கையும்
எனக்குத்தான் வயது அதிகம் எட்டு!

ஜன்னல் வழியாக எட்டிப்பார்த்தோம்
தெருவெல்லாம் ஆறாகநீர் ...
மின்னலும் இடியுமாய்

வானத்திலே வன்ம யுத்தம்!
எதிர் சாரியிலிருந்த குடிசைகளெல்லம்
மூழ்கிக் கொண்டிருந்தன
கூச்சலும் குழப்பமும் எங்கெங்கும்...
வேடிக்கைப் பார்த்த என்னை
எட்டி இழுத்தாள் குட்டித் தங்கை
‘ உள்ளே வா அண்ணா ’...

**- தாமரை**



### வாசிப்போம்

- கவிதையை வாசியுங்கள். மழைக்கால அறிகுறிகளைக் கூறுங்கள்.

### அனுபவம் பகிர்வோம்

- “அந்த மழைநாள் இரவை எங்களால் மறக்கவே முடியவில்லை”

  – உங்களுக்கு ஏற்பட்ட மழைக்கால அனுபவத்தை எழுதுங்கள்.

# மழைக்காலத்தில் செய்தித்தாள்களில் வெளியான தலைப்புச் செய்திகளைப் படியுங்கள்

**மழையால் தொற்று நோய் பரவும்**

சுகாதாரத்துறை அதிகாரிகள் எச்சரிக்கை

குமுளி: நவ: 6

**நெடுங்கண்டம் அருகே**

கனமழையால் நிலச்சரிவு

40 வீடுகள் மண்ணின் அடியில்!

**ஆலப்புழையில் கனமழை**

வீடுகளில் கடல் நீர் புகுந்தது

ஆலப்புழை- ஜூன் 19

**மாநிலம் முழுவதும் கனமழை**

இடிதாக்கி இளம் பெண் சாவு

மூணார்: ஜூன் 8

**பீருமேடு அருகே**

மழையினால் வீடு இடிந்தது

பாம்பனார்: ஜூன் 10

**மழைச் சேத விவரம் சேகரிப்பு**

ஜூலை 10

**காட்டாற்று வெள்ளத்தில் சிக்கினர்**

மக்கள் கயிறு மூலம் மீட்பு

கட்டப்பனை,

**பள்ளிக்கூட பஸ், ஆற்றில் கவிழ்ந்தது. 11 பேர் காயம்**

மங்களூர்: ஆக 15

**சித்தூரில் பலத்த மழை**


**கோரை ஆற்றில் உடைப்பு**

2 ஆயிரம் ஏக்கர் வாழை-நெல் பயிர்கள் நீரில் மூழ்கின.

சித்தூர்: ஜூன்:7

## கலந்துரையாடுவோம்

- தலைப்புச் செய்திகளை உற்று நோக்கிக் கலந்துரையாடுங்கள்.
- உருவாகும் கருத்துகளை எழுதி வெளியிடுங்கள்.



# செய்தித் தலைப்புத் தருவோம்

**தொடுபுழை, ஜுன் 14:** தென்மேற்குப் பருவமழை தீவிரமடைந்துள்ளதால் மக்களின் இயல்பு வாழ்க்கைப் பாதித்துள்ளது. பள்ளி, கல்லூரிகளுக்கு மூன்று நாட்கள் விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. இடுக்கி மாவட்டத்தில் மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தனி முகாம்கள் அமைக்கப்பட்டன.

மூணாரில் நேற்று முன்தினம் இரவு இடி மின்னலுடன் கன மழை பெய்தது. சுவர் இடிந்து விழுந்து. 3 வீடுகள் சேதமடைந்தன. பாதிப்பு அடைந்த பகுதிகளை வருவாய்த்துறை அதிகாரிகள் பார்வையிட்டு வருகின்றனர்.

**கோழிக்கோடு: ஜுன் 17**

கேரள மாநிலம் கோழிக்கோட்டில் பலத்த மழை காரணமாக தேசிய நெடுஞ்சாலையில் ஒரு ராட்சத மரம் வேரோடு சாய்ந்தது.

அந்த வழியாகச் சென்று கொண்டிருந்த கேரள அரசு பஸ் மீது விழுந்தது. இதில் பஸ் நசுங்கியது. மீட்புப் பணி நடந்து வருகிறது. இச்சம்பவத்தில், சில பயணிகள் காயமடைந் தனர். இவர்கள் கோழிக்கோடு மருத்துவக் கல்லூரியில் சிகிச்சைபெற்று வருகின்றனர். இரண்டு மணிநேரம் போக்குவரத்து பாதிக்கப் பட்டது.

- பத்திரிகைச் செய்திகளை வாசித்தோமல்லவா? பொருத்தமான தலைப்பு அளியுங்கள்.

## குறியீடுகளின் விளக்கம்

ஒரு சொற்றொடரில் பொருள் முடிவு பெற்றதை உணர்த்துவதற்காக இடும் குறி முற்றுப்புள்ளி **.**

ஒரு தொடரில் பொருள்கள் பல தொடர்ந்து வரும் போது இடம் பெறும் குறி காற்புள்ளி **,**

வினாப் பொருளைத் தரும் சொற்றொடரின் இறுதியில் இடம்பெறும் குறி வினாக்குறி **?**

வியப்புப் பொருளை உணர்த்தும் சொல்லை அடுத்து இடம் பெறும் குறி வியப்புக்குறி **!**



## அன்புத்தோழி

ஏலப்பாறை,

---------------

அன்புத் தோழி கமலிக்கு,

ஓவியா வரையும் அன்பு மடல்.

நலம் நலமறிய ஆவல்,

உன் ஊரில் அடித்த புயல் மழையால் உன் வீடும் இடிந்து விட்டது என்ற செய்தியைக் கேட்டு அதிர்ந்தேன். நீ தற்போது அகதிகள் முகாமில் தங்கியுள்ளதாக அங்கிருந்து வந்தோர் தெரிவித்தனர். உன் வீட்டிலுள்ள உடைமைகள் எல்லாம் வெள்ளத்தில் அடித்துச் சென்ற செய்தி என் மனதை உருக்குகிறது. கவலைப் படாதே கமலி.

நீ, உன் அப்பா, அம்மா எல்லோரும் நீர் வடியும் வரை முகாமில் தங்க வேண்டாம். எங்கள் ஊருக்கு வந்து விடுங்கள். நாங்கள் உங்களுக்கு உதவுவோம். இதுவரை, நீ தான் பள்ளியிலேயே முதல் மாணவியாக அனைத்திலும் வந்திருந்தாய்! நீ வாங்கிய பரிசுப் பொருட்களும் உன் கண் முன்னால் நீரில் அடித்துச் சென்றதைப் பார்த்த நீ இன்னும் அதிலிருந்து மீண்டிருக்க மாட்டாய்.

கவலைப்படாதே. நாங்கள் இருக்கிறோம். இந்தக் கடிதத்தைக் கண்டவுடன் உன் பெற்றோருடன் புறப்பட்டு வா. உன் வரவை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்.

உன் அன்புத் தோழி,

ஓவியா.

பெறுநர்

கமலி,

உப்புக்குளம் அஞ்சல்

## நாட்குறிப்பு எழுதுவோம்

- கடிதத்தை வாசித்த கமலி தனது நாட்குறிப்பில் என்னென்ன எழுதி இருப்பாள்?

## எனது அனுபவம்

- வெள்ளச் சேதத்தால் பாதிக்கப்பட்டோருக்கு உதவி செய்த அனுபவங்கள் உங்களுக்கும் ஏற்பட்டிருக்குமே! எழுதுங்கள்.

## செய்திக் கொத்து உருவாக்கலாம்

- மழைச்சேதப் படங்கள், செய்திகள் திரட்டுங்கள். செய்திக்கொத்து உருவாக்குங்கள்.

## வெள்ள நிவாரண முகாம்

- உங்கள் பாடசாலையில் வெள்ள நிவாரண முகாம் நடந்தால் நீங்கள் என்னென்ன செய்வீர்கள்?

## பொருத்தமானது எது?

- ர,ற **வேறுபாடு அறிந்து பொருத்தமான சொற்களால் நிரப்புக**

- பறவைகள்......................................சென்றன.
  உலகம்..............................................விரிந்து காணப்படும்.
  (பரந்து / பறந்து)

- குரங்கு தொப்பியை கீழே ................................
  அடுப்பில் தீ ................................
  (எரிந்தது / எறிந்தது)

- நிழல் தருவது..................................................
  போர் வீரர்களிடம் இருப்பது..........................................
  (மறம் / மரம்)

- பேருந்திலிருந்து மெதுவாக................................வேண்டும்.
  துன்புறுவோரைக் கண்டு மனம்.........................வேண்டும்.
  (இரங்க / இறங்க)

## படங்களுக்குப் பொருத்தமான குறிப்புகள் எழுதுங்கள்





